21st January 1961]

THE HON. SRI P. KAKKAN : Yes, Sir. The Government of India requested this Government to consider the question of doing away with the system of licensing of Cement Stockists.

The question has been examined by this Government and they have decided that the present system of licensing of cement stockists should continue.

SRI A. A. RASHEED : Since the Government of India have recommended and also in view of the larger production of cement in our State; will the Government be pleased to abolish this licensing system?

THE HON. SRI P. KAKKAN : Not now.

Elementary Schools

*** 72 Q.—SRI A. VEDARATHNAM :** *கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—*

(அ) தஞ்சை ஜில்லாவில் இந்தக் கல்வி ஆண்டில் எத்தனை ஆரம்பப் பள்ளிகள் உயர் ஆரம்பப் பள்ளிகளாக உயர்த்தப்பட் டிருக்கின்றன—தாலூகா வாரியாக?

(இ) தஞ்சை ஜில்லாவில் எத்தனை ஆரம்பப் பள்ளிகளை உயர் ஆரம்பப் பள்ளிகளாக மாற்றவேண்டுமென வந்த விண்ணப் பங்கள் நிறைவேற்றப்படாமலிருக்கின்றன—தாலூகா வாரியாக?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) & (*b*) A statement [a] is laid on the table of the House.

SRI A. VEDARATHNAM : *மேஜை மீது வைத்திருக்கும் பேபரில் மொத்தம் 77 பள்ளிகள் விண்ணப்பித்திருந்ததாகவும், அவற்றில் 35 பள்ளிகளின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ள தாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் எல்லாம் எந்த காரணத்திற்காக, எந்த கொள்கையின் அடிப்படையில் நிராகரிக்கப்பட்டன என்பதை அறிய விரும்புகிறேன்.*

THE HON. SRI C. SUBRAMANIAM : *பக்கத்திலே போதுமான பள்ளிக்கூடங்கள் இருந்தால் அப்போது புதிய உயர்நிலைப் பள்ளி களுக்கு அனுமதி மறுக்கப்படும். அல்லது போதுமான இடவசதி இல்லாவிட்டாலும் அனுமதி மறுக்கப்படும். இந்த மாதிரியான அடிப்படைகளை வைத்துக் கொண்டுதான் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுகின்றன.*

SRI A. VEDARATHNAM : *ஒரே ஊரில் தனியார் நடத்தும் பள்ளியும், போர்டு பள்ளியும் அங்கீகாரம் வேண்டுமென்று விண்ணப்பித்துக் கொண்டால், எதற்கு அரசாங்கம் அனுமதி கொடுக்கும்? எதை நிராகரிக்கும்?*

THE HON. SRI C. SUBRAMANIAM : *எந்தப் பள்ளிக்கூடம் நன்றாக நடக்கிறதோ அதற்கு அனுமதி கொடுக்கப்படும்.*

---

a Printed as Appendix VI on page 245 infra.

[21st January 1961

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : பக்கத்திலே ஒரு உயர்தர பள்ளிக்கூடம் இருந்தும், சில இடங்களில் அனுமதி கொடுக்கப்பட்டு இருக்கிறது. இது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அந்த மாதிரி இருக்கக் கூடிய கேஸ்களைக் குறித்துக் கொடுத்தால், கேட்பதற்கு வசதியாக இருக்கும்.

SRI A. VEDARATHNAM : திருத்துறைப்பூண்டி தாலுகாவில் 10 பள்ளிக்கூடங்கள் அப்-கிரேட் செய்வதற்காக விண்ணப்பித்திருந்தும், 10 விண்ணப்பங்களும் நிராகரிக்கப்பட்டிருக்கின்றன. அது எந்த காரணத்தினால் நிராகரிக்கப்பட்டது என்று கூற முடியுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : நான் சொன்ன காரணத்தினால்தான். நாகப்பட்டிணத்தில் 5 பள்ளிகளுக்கு 5 பள்ளிகள் அங்கீகரிக்கப்பட்டிருப்பதை கனம் அங்கத்தினர் கவனிக்க வேண்டும். ஆகவே, ஆங்காங்கே இருக்கக்கூடிய அத்தியாவசியத்தை அனுசரித்தே, போதுமான பள்ளிக்கூடங்களுக்கு அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

Teachers Training Colleges

* 73 *Q.*—SRI A. VEDARATHNAM : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1960-61-ல் இம்மாநிலத்திலுள்ள பி.டி. ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி ஒவ்வொன்றிலும் எத்தனை பயிற்சியாளர்களுக்கு இடமிருக்கின்றது ?

(இ) அவை ஒவ்வொன்றிலும் இந்தக் கல்வி ஆண்டில் எத்தனை பயிற்சியாளர்கள் (விஞ்ஞானம், கணிதம், சமூகம் போன்ற சப்ஜக்ட் வாரியாக) சேர்ந்திருக்கிறார்கள் ?

(உ) இம்மாநிலத்திலுள்ள பட்டதாரி ஆசிரியர் பற்றாக் குறையைப் போக்க இந்த எண்ணிக்கை போதுமானதா ?

(எ) இல்லையானால் இந்தப் பற்றாக்குறையைப் போக்க என்ன முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) & (*b*) A statement [a] is laid the table of the House.

(*c*) Yes, Sir.

(*d*) Does not arise.

SRI A. VEDARATHNAM : இப்போது இந்த ஆண்டு அனுபவத்திலிருந்து நம்முடைய மாகாணத்திற்குப் போதுமான பட்டதாரி ஆசிரியர்களை இப்போதுள்ள கல்லூரிகளிலேயே தயார் செய்து விட முடியுமென்ற நம்பிக்கை அரசாங்கத்திற்கு இருக்கிறதா ? அப்படி இல்லையானால், இன்னும் பட்டதாரி ஆசிரியர் பயிற்சிக்கான கல்லூரிகள் தேவைப்படுமா ? அப்படித் தேவைப்பட்டால், அப்படிப்பட்ட கல்லூரிகளில் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கான யோசனை அரசாங்கத்திடம் உள்ளதா ?

---

a Printed as **Appendix VII on page 246 infra.**